**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,

**ந.க.எண்.255472/எச்.2/2016** **நாள் : 10.05.2017**

**அய்யா / அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலைப் பொதுத்தேர்வு, மார்ச் 2017 – தேர்வு முடிவு வெளியிடப்படவுள்ள இணையதள முகவரிகள் – விடைத்தாள் நகல், மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கான நாட்கள் – செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

நடைபெற்ற மார்ச் **2017** மேல்நிலைப் பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ள இணையதள முகவரிகள், விடைத்தாள் நகல்/ மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கான நாட்கள் குறித்த தகவல்கள் அடங்கிய செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை மாணாக்கர்/தேர்வர் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது விளம்பரம் அல்ல.

தங்கள் நம்பிக்கையுள்ள.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு:**
செய்திக்குறிப்பு

## <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.</u>

### <u>மேல்நிலைப் பொதுத்தேர்வு, மார்ச் 2017 தேர்வு முடிவுகள் வெளியிடுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல்</u>
### <u>செய்திக் குறிப்பு</u>

நடைபெற்ற மார்ச் 2017 மேல்நிலைப் பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணாக்கர் மற்றும் தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் 12.05.2017 அன்று காலை 10.00 மணிக்கு வெளியிடப்படுகிறது. தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி, மாதம், வருடத்தினைப் பதிவு செய்து, தேர்வு முடிவுகளை மதிப்பெண்களுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள இணையதளங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

www.tnresults.nic.in
www.dge1.tn.nic.in
www.dge2.tn.nic.in

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் தேசிய தகவலியல் மையங்களிலும் (National Informatics Centre), அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும் கட்டணம் இன்றி தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ளலாம்.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

**பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலம் தேர்வு முடிவு அனுப்பப்படும்.**

**தனித்தேர்வர்களுக்கும், ஆன்–லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைப்பேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக ( SMS) அனுப்பப்படும்.**

மேலும் 15.05.2017 முதல் பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் தங்களுக்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழைத் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து www.dge.tn.nic.in என்ற இணையதளத்தில் தாங்களே பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும் 17.05.2017 முதல் தேர்வர்கள் தாங்கள் பயின்ற/தேர்வெழுதிய பள்ளி/மையத்தின் தலைமை ஆசிரியர் மூலமாகவும் தங்களது தற்காலிக மதிப்பெண் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

**<u>விடைத்தாள் நகல் மற்றும் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:</u>**

விடைத்தாள் நகல் மற்றும் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் மூலமாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் 12.05.2017 முதல் 15.05.2017 வரை (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) விண்ணப்பிக்கலாம்.

தேர்வர்கள் தங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவையா அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா என்பதை முன்னரே தெளிவாக முடிவு செய்து கொண்டு அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாளின் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

விடைத்தாளின் நகல் கோரி விண்ணப்பிப்போர், அதே பாடத்திற்கு மதிப்பெண் மறுகூட்டலுக்கு தற்போது விண்ணப்பிக்கக் கூடாது. விடைத்தாளின் நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

**<u>விடைத்தாளின் நகல் (Copy of the answer script) பெறுவதற்கான கட்டணம் :</u>**

| | | |
|---|---|---|
| பகுதி – I மொழி | – | ரூ.550/– |
| பகுதி – II மொழி (ஆங்கிலம்) | – | ரூ.550/– |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.275/– |

**<u>மறுகூட்டல் (Retotalling) கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| பகுதி – I மொழி, பகுதி – II மொழி (ஆங்கிலம்) மற்றும் உயிரியல் ஒவ்வொன்றிற்கும் | – | ரூ.305/– (இரு தாட்கள் சேர்த்து) |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

**<u>பணம் செலுத்தும் முறை :</u>**

விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளும் முறை :</u>**

விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டினை மாணவர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒப்புகைச் சீட்டில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப எண்ணைப் பயன்படுத்தியே தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளவும், மறுகூட்டல் முடிவுகளை அறிந்து கொள்ளவும் இயலும்.

விடைத்தாளின் நகலினை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் இணையதள முகவரி பின்னர் வெளியிடப்படும்.

**<u>மேல்நிலை சிறப்பு துணைத் தேர்வுகள், ஜுன் 2017 :</u>**

மார்ச் 2017—ல் நடைபெற்ற மேல்நிலைப் பொதுத்தேர்வில் தேர்வெழுத பதிவு செய்து, தேர்ச்சி பெறாதோருக்கும் / வருகை புரியாதோருக்கும் நடத்தப்படும் சிறப்பு துணைத்தேர்வு ஜுன் மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை மற்றும் விண்ணப்ப தேதிகள் குறித்து விரைவில் தனியே அறிவிப்பு வெளியிடப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/—
**இயக்குநர்**

**நாள் : 10.05.2017**
**இடம் :** சென்னை – **600 006.**

**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,

**ந.க.எண்.255472/எச்2 /2016** **நாள்.10.05.2017**

**ஐயா,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச் 2017, மேல்நிலைப் பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடுதல் – சார்ந்து.

-----

நடைபெற்ற மார்ச் **2017** மேல்நிலைப் பொதுத்தேர்விற்கான தேர்வு முடிவுகள் **12.05.2017** அன்று காலை **10.00** மணிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநரால் வெளியிடப்படவுள்ளது.

எனவே, தங்கள் நிருபர் ஒருவரை தகுந்த அதிகார அளிப்புக் கடிதத்துடன் அனுப்பி, தங்கள் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அறையிலிருந்து விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/–

**இயக்குநர்**